25th September 1958]

Compulsory education and free meals to poor students

* 520 *Q.*—Sri T. VELUCHAMI : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

தேசீய அபிவிருத்தித் திட்டப் பகுதிகளிலாவது பாடசாலையில் எளிய மாணவர்களுக்கு சாப்பாடு போட்டு சில வகுப்புக்கள் வரை கட்டாயக் கல்வி முறையை அமுல் செய்யும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : Yes, Sir. It is proposed to introduce compulsory enrolment up to standard V in selected Development Blocks and to extend it throughout the State according to a phased programme. The Scheme includes provision of free school meals to poor children. The school-meal scheme has, however, been introduced already from November 1957.

Sri T. VELUCHAMI : மற்ற எல்லா ப்ளாக்குகளிலும் இந்த வகுப்புகள் வரை கட்டாயக் கல்வி முறையை அமலுக்குக் கொண்டு வருவது எப்போது சாத்தியப்படும் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இந்தத் திட்டத்தைப் படிப்படியாக நிறைவேற்ற வேண்டும் என்பது தான் சர்க்காரின் உத்தேசம். நம் ராஜ்யத்தில் எல்லாக் குழந்தைகளுக்கும் 5-வது வகுப்பு வரையிலாவது கல்வி அளிப்பதற்கு 1965-ம் வருஷத்திற்குள் ஏற்பாடு செய்யப்படும்.

Tirugokarnam hospital

* 521 *Q.*—Sri V. ARUNACHALA THEVAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government are aware that there is no doctor at the Tirugokarnam hospital in the Pudukkottai division for the past two years ; and

(*b*) if so, whether the Government have any proposal to appoint immediately a doctor for the Tirugokarnam hospital?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) The dispensary was without an Assistant Surgeon only for short periods from 1st September 1957 to 27th October 1957 and from 20th February 1958 to 28th April 1958, when the Assistant Surgeon was posted temporarily to the Primary Health Centres at Tiruvarankulam and Tirumanur respectively.

(*b*) Does not arise.

Qualified doctors in Government hospitals

* 522 *Q.*—Sri K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether any Government hospital are short of qualified doctors; and

(*b*) if so, to what extent and the reasons therefor?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) Yes, Sir.

(*b*) Sixteen posts in Primary Health Centres and 94 posts in other Medical Institutions are vacant. Medical Officers are not enthusiastic about serving in rural areas.

[25th September 1958

SRI K. RAMACHANDRAN : தேர்ச்சி பெற்ற (க்வாலிபைட்) டாக்டர்கள் கிடைக்காததற்குக் காரணம் வைத்திய இலாகாவில் கெஜடெட் உத்தியோகஸ்தர்களாக இருக்கும் சில டாக்டர்களின் சம்பளம் கூட, இதர இலாக்காக்களில் இருக்கும் கெஜட் பதிவு பெற்ற சில உத்தியோகஸ்தர்களின் சம்பளத்தைவிடக் குறைவாக இருப்பதுதானா ? அப்படியானால், அவர்களுடைய சம்பளத்தை அதிகரிக்கும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அந்த ஒரு காரணத்துடன் மட்டுமில்லை. வேறு பல காரணங்கள் இருக்கின்றன. **The main reason is, inadequacy of the existing scales of pay and allowances, lack of prospects of promotion and improbability of earning full pension, better prospects in other States and private institutions, possibility of making a good living by private practice and extreme reluctance to serve in primary health centres and rural areas where even the elementary facilities like good sanitation, electricity, etc., are not available.**

SRI S. LAZAR : இது சம்பந்தமாக முன்பொரு நாள் இந்த சபையில் கனம் அமைச்சர், " இப்போது வைத்தியக் கல்லூரியில் படிப்பவர்கள் பரீக்ஷையில் தேறிவிட்டு உத்தியோகத்திற்கு வரும்போது கிராம ஆஸ்பத்திரிகளில் நியமிக்கப்படுவார்கள் " என்று கூறினார். அவர் அவ்வாறு கூறி நான்கு மாதங்கள் ஆகிவிட்டன. ஆனால் இன்னும் இந்தப் பிரச்னை தீரவில்லை. எனவே, சர்க்கார் வேறு ஏதாவதொரு திட்டம் வகுக்க விருக்கிறார்களா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : எங்களுக்கு வேறு எந்தத் திட்டமும் புலப்படவில்லை. ஆகவே கனம் அங்கத்தினர் ஏதாவது யோசனை கூறினால் அது கவனிக்கப்படும்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : What are the proposals of the Government to overcome this difficulty, if the situation continues like this?

THE HON. SRI M. A. MANICKAVELU : We have already provided an inducement by raising the non-practising allowance in primary health centres from 50 to 100 rupees. This has had some effect. There is also a proposal to build residential quarters for the doctors in the primary health centres. We are getting more medical men trained. A new college has also been opened and by the time it also turns out doctors, we will be able to cope with the demand.

SRI S. NAGARAJA MONIGAR : டாக்டர்கள் கிராமப்புறங்களுக்குச் சென்று அங்கே வேலை பார்க்க முன்வருவதில்லை என்று பல வருஷங்களாகவே சொல்லப்பட்டு வருகிறது. எல்லா இலாகாவினரும் கிராமங்களுக்குப் போய் அங்கே வேலை செய்ய முன்வரவில்லையானால் சர்க்கார் என்ன செய்யும் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : எல்லோரும் சேர்ந்து கிராமங்களை வசீகரமானவையாக ஆக்க வேண்டும்.

SRI P. U. SHANMUGAM : உற்சாகக் குறைவு காரணமாக கிராமப்புறங்களுக்குச் சென்று அங்கே வேலை செய்ய டாக்டர்கள் முன்வருவதில்லை என்று கனம் அமைச்சர் சொன்னார். எனவே, வைத்தியப் படிப்பு படிக்கும் மாணவர்கள் படிப்பு முடிந்தவுடன் உத்தியோகத்திற்கு வருவதற்கு முன்பு கிராமங்களுக்குச் சென்று அங்கே வைத்தியர்களாகப் பணியாற்றவேண்டுமென்று விதி வகுக்க சர்க்காருக்கு உத்தேசம் உண்டா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அதுபற்றியும் யோசிக்கப்பட்டது. இப்போதிருக்கும் சட்டப் பிரகாரம் அம்மாதிரி விதி வகுக்க முடியாது. ஸ்காலர்ஷிப் பெற்றுப் படிப்பவர்களைப் பொறுத்த வரையில், ஸ்காலர்ஷிப் கொடுக்கும்போது இவ்வாறு நிபந்தனை விதிக்கலாம்.

25th September 1958]

SRI K. G. PALANISWAMY GOUNDER : கிராமங்களுக்குச் சென்று அங்கே பணியாற்றுவதற்கு டாக்டர்கள் முன்வருவதில்லை என்று தெரி கிறது. எனவே, மாணவர்களை வைத்தியக் கல்லூரியில் சேர்த்துக்கொள் ளும்போதே, படிப்பு முடிந்தவுடன் அவர்கள் இரண்டு வருஷங்களாவது கிராமங்களில் பணியாற்றிய பிறகுதான் நகரத்திற்கு வரவேண்டும் என்ற நிபந்தனைக்கு அவர்களை உட்படுத்துவதற்கு சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இதற்கு ஏற்கனவே பதில் சொன்னேன். இப்போதுள்ள சட்டப்படி, அவர்களை இந்த மாதிரியான நிர்ப்பந்தத்திற்கு உட்படுத்தமுடியாது.

Nannilam–Nachiarkoil Road

* 523 *Q*.—SRI M. C. MUTHUKUMARASWAMY : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Nannilam–Nachiarkoil Road in Tanjore district, Nannilam taluk, has been metalled in full ;

(*b*) what is the total length of the road;

(*c*) what is the amount set apart for the work;

(*d*) whether the above road is maintained by the Highways Department or by the Public Works Department; and

(*e*) the length of the road maintained by each department?

THE HON. SRI P. KAKKAN : (*a*) to (*e*) The road is known as the Nagore-Nannilam-Nachiarkoil Road and is 29 miles, one furlong, 275 feet long. The first 27 miles have been metalled and it is under the control of the Highways Department. As regards the remaining length, viz., two miles, one furlong, 275 feet which is on an irrigation river bank and is under the control of the Public Works Department, the metalling at a cost of Rs. 1 lakh has been sanctioned and this bit of road will be taken over from the Public Works Department by the Highways Department for metalling and future maintenance.

SRI M. C. MUTHUKUMARASWAMY : இந்த ரோடுக்குக் கப்பி போட ஆரம்பித்து ஏறக்குறைய 16 வருஷங்கள் ஆகின்றன. இந்தக் கால தாமதத்தைப் பார்க்கும்போது, இந்த வேலை கோவிலுக்கு கோபுரம் கட்டும் திட்டம்போல இருக்கிறது என்று சொல்லத் தோன்றுகிறது. இது சம்பந்தமாக, அந்தப் பகுதியில் சுற்றுப் பிரயாணம் செய்த அமைச் சர்களில் ஒவ்வொருவருக்கும் மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த ரோடின் மீது இரண்டு இலாகாக்கள் அதிகாரம் செலுத்தி வருகின்றன. காலதாமதத்திற்கான குற்றத்தை இரு இலாக்காக்களும் ஒன்றின் மீது ஒன்று சாட்டிக்கொண்டு திட்டத்தை காலம் கடத்தி வருகின்றன.

MR. SPEAKER : கேள்வி நேரத்தில் கேள்வி போட வேண்டும். என் அந்த ரோடு இன்னும் போடப்படவில்லை என்று உங்களுக்குத் தெரிந்திருக்கும்போது, அந்தக் காரணத்தைக் கேட்பதற்கு என் நீங்கள் கேள்வி போடுகிறீர்கள் ? இந்த நேரத்தில் கேள்வி போட வேண்டும். இப்போது நீங்கள் செய்வது போன்ற பிரசங்கங்களை பட்ஜெட் விவாதத் தின்போது செய்யுங்கள்.

SRI M. C. MUTHUKUMARASWAMY : இந்த ரோடிற்குக் கப்பி போட ஆரம்பித்து 16 வருஷங்கள் ஆகின்றன. அங்கே ரோடு போடும் வேலையை இன்னும் தாமதிக்காமல் குறுகிய காலத்தில் செய்துமுடிக்க அரசாங்கம் தீவிர நடவடிக்கை எடுக்குமா ?